Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் சனிக்கிழமை, ஜூலை 17, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 3

## பெட்ரோல், டீசல் விலை உயர்வை திரும்ப பெற கோரி முஸ்லிம் மக்கள் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

திண்டிவனம், ஜூலை 17 2021: கூட்டேரிப்பட்டில் முஸ்லிம் மக்கள் கழகத்தின் சார்பில் டீசல், பெட்ரோல் விலை உயர்வை திரும்பப் பெறக் கோரி கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாநில இளைஞரணி தலைவர் விக்ரம் தலைமை தாங்கினார். விழுப்புரம் மாவட்ட இளைஞரணி தலைவர் தண்டபாணி, மயிலம் தொகுதி செயலாளர் காதர்பாஷா, மயிலம் தொகுதி தலைவர் பாலமுருகன், முஸ்லீம் மக்கள் கழகம் நடராஜன், விக்கிரவாண்டி தொகுதி தலைவர் சின்னையன், வானூர் தொகுதி அமைப்பாளர் சேட்டு, வானூர் தொகுதி செயலாளர் முருகன், ஒலக்கூர் ஒன்றிய செயலாளர் வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் விழுப்புரம் மாவட்ட செயலாளரும், மாநில பொது குழு உறுப்பினருமான வெங்கடேசன் வரவேற்றார். முஸ்லிம் மக்கள் கழக நிறுவன தலைவர் முனைவர் ச.சு.ஜைனுதீன், மாநில செய்தி தொடர்பாளர் ராஜா, விழுப்புரம் மாவட்ட தலைவர் ஆரியசாமி, காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் ஷோக்கத் அலி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.



ஆர்ப்பாட்டத்தில் மத்திய அரசு உயர்த்தியுள்ள டீசல், பெட்ரோல் விலை உயர்வால் அத்தியாவசிய பண்டங்களின் விலைவாசி கடுமையாக உயர்வதால் விலை உயர்வைத் திரும்பப் பெற வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் அனைவருக்கும் வேலை வழங்கிட வேண்டும். மத்திய அரசு கொண்டு வந்துள்ள விவசாயிகளுக்கு விரோதமான வேளாண் சட்டங்களை ரத்து செய்து, விவசாயிகளை பாதுகாத்திடவும் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு கூடுதலாக விலை நிர்ணயிக்க வேண்டும். கூட்டேரிப்பட்டு கிராம தெருக்களில் புதிய சாலை அமைத்திட கோரி கடந்த 23.6 2021 அன்று முஸ்லிம் மக்கள் கழகம் மயிலம் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கூட்டேரிப்பட்டு சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். கூட்டேரிபட்டு ஊராட்சிக்கு உட்பட்ட ரெட்டியார் தெரு, முருகன் நகர் உள்ளிட்ட அனைத்து தெருக்களின் சாலைகள் மண் சாலைகளாக காணப்படுகிறது. மேற்படி சாலைகளை செப்பணிட்டு புதிய சாலைகள் அமைத்து தர முஸ்லிம் மக்கள் கழகம் கேட்டுக் கொள்கிறது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மரக்காணம் ஒன்றிய மகளிரணி செயலாளர் சசிகலா நன்றி கூறினார்.

## 2024 அதிக எம்பிக்களை டெல்லிக்கு அனுப்புவதே நமது முதற் கட்ட பணி கூட்டேரிப்பட்டு வரவேற்பு நிகழ்ச்சியில் அண்ணாமலை பேச்சு

திண்டிவனம், ஜூலை 17 2021: 2024ல் அதிக எம்.பி.,க்களை டெல்லிக்கு அனுப்புவது தான் நமது முதற்கட்ட பணியாக இருக்க வேண்டும். கூட்டேரிப்பட்டு நான்கு முனை சந்திப்பில் பாரதிய ஜனதா கட்சியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அண்ணாமலை பேச்சு விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த கூட்டேரிப்பட்டு நான்குமுனை சந்திப்பில் பாரதிய ஜனதா கட்சியின் புதிய தலைவர் அண்ணாமலைக்கு நேற்று இரவு மயிலம் ஒன்றிய தலைவர் மோகன் பாபு தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்பு நிகழ்ச்சியில் பேசிய பாரதிய ஜனதா கட்சித் தலைவர் அண்ணாமலை, ஆளும் கட்சியாக அமரும் காலம் வெகு தொலைவில் இல்லை. 2024ல் நிறைய எம்.பி.,க்களை டெல்லிக்கு அனுப்ப வேண்டும். அதுவே நமது முதற்கட்ட பணியாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் மட்டும் மூன்றரை கோடி பயனாளிகள் உள்ளனர். அவர்களை தேடி கண்டுபிடித்து நமது கட்சி கொள்கைகளை எடுத்துக்கூறி வாக்குகளாக மாற்ற வேண்டும். திராவிட முன்னேற்ற கழகத்தை தொடர்ந்து எதிர்த்து நிற்கின்ற ஒரே கட்சி பாரதிய ஜனதா கட்சி. 69 நாட்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தை பலமுறை எதிர்த்துள்ளோம். டாஸ்மாக் திறந்ததிலிருந்து தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இது ஆரம்பம் தான். அடுத்த மூன்று வருடம் மக்களுக்காக வீதியில் தான் இருப்போம். போராட்டம் நடத்திக் கொண்டிருப்போம். தி.மு.க.வின் ஊழலை தட்டிக் கேட்போம். இவ்வாறு அவர் பேசினார்.



நிகழ்ச்சியில் மாநில செயலாளர் டாக்டர் குணாளன் மாவட்ட துணைத் தலைவர் முத்துலட்சுமி, மாநில கட்டுமான பிரிவு செயலாளர் திருவேங்கடம், மாவட்ட பொதுச் செயலாளர் பாண்டியன், மயிலம் ஒன்றிய நிர்வாகிகள் கைலாஷ், ரத்தினவேல், அண்ணாதுரை, சக்திவேல், ரஞ்சித் மற்றும் முன்னணி நிர்வாகிகள் வரவேற்றனர்.

## தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் விழுப்புரத்தில் நூதன ஆர்ப்பாட்டம்

விழுப்புரம், ஜூலை 17 2021: விழுப்புரம் கலெக்டர் அலுவலகம் முன்பு தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் பெட்ரோல் டீசல் கேஸ் விலை உயர்வை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

தமிழக வாழ்வுரிமை கட்சி மாவட்ட செயலாளர் குமரன் தலைமையில் பெட்ரோல், டீசல், கேஸ் விலை உயர்வை கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டத்தில் கேஸ் சிலிண்டரை சவபடுக்கையில் வைத்தும், காரை மாட்டு வண்டியில் ஏற்றி தங்களுடைய எதிர்ப்பை தெரிவித்து கண்டன முழக்கம் எழுப்பினர்.







**திண்டிவனம்: கூட்டேரிப்பட்டு நான்குமுனை சந்திப்பில் தமிழ்நாடு காங்கிரஸ் மனித உரிமை துறைத் தலைவர் மகாத்மா சீனிவாசன் தலைமையில் பெட்ரோல் டீசல் விலை உயர்வை திரும்ப பெற வலியுறுத்தி சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு 900 கிலோ மீட்டர் தூர மாபெரும் சைக்கிள் கண்டனப் பேரணிக்கு வரவேற்பளிக்கப்பட்டது.**



**மதுரை: மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆலாத்தூர் ஊராட்சி கே.பி. கார்டனில் புதிய மின் மாற்றியினை (டிரான்ஸ்பார்மர்) வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி துவக்கி வைத்தார்.**

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

நிருபர்கள் தேவை

தமிழகமெங்கும் காலையில் வெளிவரும்
ஹலோ மிரர் மெட்ராஸ் நாளிதழுக்கு
மாவட்டம், தாலுகா, பகுதி, நகர வாரியாக
அனுபவமுள்ள நிருபர்கள் தேவை
தொடர்புக்கு 8148231942
hellomadrasdaily@gmail.com

## இலவச பாட புத்தகங்களுக்கு கட்டணம் வசூலிப்பா? சமூக ஆர்வலர்கள் அதிருப்தி

விழுப்புரம், ஜூலை 17 2021: விழுப்புரம் மாவட்டத்தில் அரசு பள்ளிகளுக்கு அனுப்பப்படும் முதல் பருவ இலவச நோட்டு, புத்தகங்கள் மற்றும் சீருடைகள் ஏற்றிச் செல்லும் செலவு தொகையை, தலைமை ஆசிரியர்களே ஏற்கும் நிலை உள்ளதால், கடந்த காலங்களைப் போல் இலவச புத்தகங்களுக்கு கட்டணமாக சொற்பத் தொகை மாணவர்களிடம் வசூலிக்கும் நிலை உள்ளதாக சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு முதன்மை கல்வி அலுவலகம் மூலம், அந்தந்த மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு அரசு பள்ளிகளுக்கு வழங்கப்படும் இலவச பாடநூல் மற்றும் நோட்டு புத்தகங்கள் சீருடைகள் உள்ளிட்டவைகள் அனுப்பப்பட்டு வந்தது.

மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பள்ளிகளுக்கு அரசு செலவில் வாகனங்களில் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டன.

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச பாட புத்தகங்களுக்கு அவர்களிடமிருந்து ரூபாய் 1 வசூலிக்கப்பட்டு வந்தது. அப்போதைய திமுக ஆட்சியில் பள்ளிக்கல்வித்துறை இயக்குனராக தேவராஜன் பதவி வகித்த காலத்தில், மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்க கூடாது எனவும், அரசு செலவில் பாடநூல்கள் வழங்கவும் ஆவண செய்யப்பட்டது. தற்பொழுது கொரோனா ஊரடங்கால் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்ட நிலையில், வரும் செப்டம்பர் அல்லது ஆகஸ்ட் மாதங்களில் பள்ளிகள் திறக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்பட்டு வரும் நிலையில், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளிகளுக்கு முதல் பருவ இலவச பாடநூல்கள் வழங்கப்பட்டு வருகிறது.


இந்த நிலையில் நோட்டு புத்தகங்கள், சீருடைகள் உள்ளிட்டவைகள் அந்தந்த மாவட்ட கல்வி அலுவலகம் மூலம் செயல்பட்டு வரும் வட்டார கல்வி அலுவலகத்தில் தலைமையாசிரியர்கள் நேரில் சென்று அவைகளை பெற்றுச் செல்கின்றனர். ஆனால் தமிழக அரசு பாடநூல், நோட்டு புத்தகம் சீருடைகள் உள்ளிட்டவைகளை அந்தந்த பள்ளிகளுக்கு வாகனங்களில் சென்று சேர்க்க செலவின தொகை வழங்கப்பட்டு வரும் நிலையில், தற்போது விழுப்புரம் மாவட்டத்தில் அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தங்களது சொந்த செலவில் பாட புத்தகங்களை கொண்டு செல்லும் நிலை உள்ளது.



இதனால் கடந்த காலங்களைப் போல் தலைமையாசிரியர்கள் புத்தகங்கள் பெற்று வந்த செலவின தொகையை, மாணவர்களிடம் மீண்டும் வசூல் செய்யும் நிலை உள்ளதாக, சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

ஆகவே தமிழக அரசு மாணவர்களிடம் மீண்டும் இலவச பாட புத்தகங்களுக்கு கட்டணம் வசூலிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

காமராஜர் பிறந்த நன்னாளில்,
தமிழகம் முழுவதும் உதயமாகும்
ஹலோ மிரர் மெட்ராஸ்
தினசரி நாளிதழ்
மென்மேலும் சிறக்க நல்வாழ்த்துகள்



ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியத்துக்குட்பட்ட குத்திலுப்பை ஊராட்சியில் 220 இலட்சம் மதிப்பீட்டிலான பூமிபூஜை உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது

ஒட்டன்சத்திரம், ஜூலை 17 2021: திண்டுக்கல் மேற்கு மாவட்டம் ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட குத்திலுப்பை ஊராட்சியில் பேருந்து நிறுத்தம் முதல் குட்டியாகவுண்டன்புதூர் ஆதிதிராவிடர் காலனி சாலையை இதர மாவட்ட சாலையாக தரம் உயர்த்தி சுமார் 220 இலட்சம் மதிப்பீட்டில் பூமிபூஜை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, பழனி வருவாய் கோட்டாட்சியர் ஆனந்தி, ஒட்டன்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் அய்யம்மாள்முருகன், மாவட்ட கவுன்சிலர்கள் சகுந்தலா, சங்கீதா பழனிச்சாமி, ஒன்றிய துணை பெருந்தலைவர் காயத்ரிதேவி தர்மராஜன், திண்டுக்கல் மாவட்ட ஊராட்சி தலைவர் கா.பொன்ராஜ், குத்திலுப்பை ஊராட்சி மன்ற தலைவர் இரா.லட்சுமிராஜசேகரன், ஊராட்சிமன்றத் துணைத் தலைவர் த.செந்தில்வடிவு தங்கமுத்து, ஒட்டன்சத்திரம்



வட்டாட்சியர் முத்துச்சாமி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் சுரேஷ்கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் கண்ணன், ஒன்றிய பொறியாளர்கள் விஜயராகவன், பி.டி. அன்புச்செல்வி மாவட்ட மக்கள் செய்தி தொடர்பு அலுவலர் சாலி தளபதி, ஊராட்சி செயலர் அஜிதா, திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் பங்கேற்றனர்.

# தொழில் தொடங்க 50 லட்சம் மானியம் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் முரளீதரன்

தேனி, ஜூலை 17 2021: தேனி மாவட்டத்தில்தொழில் துவங்க மானியத்துடன் கடன் பெறலாம் என தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் முரளீதரன் தெரிவித்துள்ளார்.

புதிய தொழில்கள் தொடங்குவதால் சுயவேலைவாய்ப்பு பொருளாதார வளர்ச்சி உயரும் புதிய தொழில்முனைவோர் மேம்பாட்டிற்கு நீட்ஸ் திட்டம் உள்ளது 21 வயது முதல் 45 வயது வர சிறப்பு பிரிவினரும் 21 முதல் 35 வயது வரை பொது பிரிவினரும் முன்னாள் ராணுவத்தினர் மாற்றுத் திறனாளிகள் பெண்கள் தொழில் துவங்க வங்கி கடன் கோரலாம் முதல் தலைமுறை தொழில்முனவோ ராகவும் பட்டம் பட்டயம் ஐடிஐ படிப்பில் தேர்ச்சி பெற்றவராகவும் இருக்கவேண்டும் சக்கர அலைன் மென்ட் கான்கிரீட் கலவை இயந்திரம் அரிசி ஆலை ஆயத்த ஆடை தயாரிப்பு தொழில்கள் தொடங்கலாம் 10 லட்சம் முதல் 5 கோடி வரை கடன் வழங்கபடும்

இதில் 25 சதவீதமான 50 லட்சம் மானியம் வட்டி மானியம் வழங்கபடும் ஆர்வமுள்ளவர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

# மதுரை திருப்பரங்குன்றம் அருகே வயிற்று வலியால் 17 வயது சிறுமி தூக்கிட்டு தற்கொலை ; உடலைக் கைப்பற்றி போலீசார் விசாரணை

மதுரை, ஜூலை 17 2021: மதுரை திருப்பரங்குன்றம் தேவி நகர் பகுதியில் வசித்து வருபவர் ரவி இவரது ஒரே மகளான 17 வயதுடைய அங்காள ஈஸ்வரி சில தினங்களாக மாதாந்திர வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்துள்ளார்.

இந்தநிலையில் நேற்று காலை வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் அங்காள ஈஸ்வரி சேலையால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதைக்கண்ட சிறுமியின் பெற்றோர் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர் ஆனால் மருத்துவர் ஏற்கனவே சிறுமி இறந்துவிட்டதாக கூறினார்.

இதனையடுத்து தகவலறிந்து வந்த ஆஸ்டின்பட்டி போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசியல் ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்தியாவில் கல்வி தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக பன்னாட்டு கல்வி நிறுவனங்களுடன் இணையும் யூனிபார்ம் ஜங்சன் நிறுவனம். ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்களை கல்வி துறையில் முதலீடு செய்கிறது.

சென்னை, ஜூலை 17 2021: அரவிந்த் மஃபத்லால் குழுவின் ஒரு பகுதியான யூனிபார்ம் ஜங்சன் நிறுவனம், இஸ்ரேலை சேர்ந்த முன்னணி மற்றும் அதிநவீன கற்றல் பகுப்பாய்வு தீர்வு வழங்குநரான எக்ஸ்10எட் நிறுவனத்துடனான கூட்டணியை இன்று அறிவித்தது. அறிவாற்றல் திறன்கள், சமூக திறன்கள், படைப்பாற்றல் போன்ற பல்வேறு சுருக்கமான கல்வி தொகுப்பிற்கு ஏற்றவாறு பாடசாலைகளின் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கு இந்த கூட்டணி உதவும். இன்று யூனிபார்ம் ஜங்சன் நிறுவனம் தனது சர்வதேச கூட்டாண்மைகளுக்கான ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டை அறிவித்தது. இதன் மூலம் உலகின் முன்னணி மற்றும் மிகப்பெரிய பள்ளி தொழில்நுட்ப தீர்வுகள் வழங்கும் நிறுவனமாக உருவெடுக்க யூனிபார்ம் ஜங்சன் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இது குறித்து யூனிபார்ம் ஜங்சன் நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் இயக்குனர் மற்றும் அரவிந்த் மஃபத்லால் குழுவின் தலைமை நிர்வாக அதிகாரி பிரியவ்ரதா மபத்லால் கூறுகையில், மழலையர் பள்ளி முதல் உயர்நிலை கல்வி வரையிலான கல்வி நிறுவனங்களின் கல்வி தொழில்நுட்பத்திற்கான தேவைகள் அதிகரித்து வருகிறது. கல்வி நிறுவனங்கள் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கலில் முதலீடு செய்து, இளம் மற்றும் ஆற்றல்மிகு மாணவர்களை அடையாளம் காண முற்படுகின்றன. எதிர்கால மற்றும் உலகளாவிய கற்றல் தீர்வுகளுக்கான தேவைகளும் தற்போது அதிகரித்து வருகிறது. இன்றைய கல்விக்கு எந்த வகையான எல்லைகளும் இல்லை மேலும் மாணவர்களும் உலகளாவிய குடிமக்களாக வளர்க்கப்பட வேண்டும். எனவே எங்கள் கூட்டு மூலோபாயம் மூலம் பள்ளிகளுக்கு மாறுபட்ட மற்றும் முழுமையான கற்றல் தீர்வுகளை கொண்டு வருவதில் கவனம் செலுத்தவுள்ளோம். எங்கள் முதல் கூட்டாண்மை உலகின் மிகப்பெரிய அதிநவீன கற்றல் பகுப்பாய்வு தீர்வு வழங்குநரான எக்ஸ்10எட் நிறுவனத்துடன் அமைந்திருப்பது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது என்று கூறினார்..

இஸ்ரேலின் கல்வி முறை உலகின் மிகச்சிறந்த கல்வி முறைகளில் ஒன்றாகும். பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (ஓ.இ.சி.டி) தரவுகளின்படி, அதிக கல்வி அறிவு உள்ள நாடுகளில் கனடா மற்றும் ஜப்பானுக்கு அடுத்தபடியாக இஸ்ரேல் மூன்றாவது இடத்தில் உள்ளது, இது கொரியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவை விட அதிகமாகும்.

இந்த கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த எக்ஸ்10எட்-இன் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி கில் அல்மோக் கூறுகையில், பள்ளிகளில் குறியீட்டு முறை, கணக்கீட்டு சிந்தனை, தரவு கல்வியறிவு மற்றும் அறிவியல் போன்ற முக்கிய கற்றல் தேவைகளை யூனிபார்ம் ஜங்சன் அடையாளம் கண்டுள்ளது. இஸ்ரேலில் நூற்றுக்கணக்கான தனித்துவமான கல்வி தொழில்நுட்ப தீர்வுகள் உள்ளன, அவை இந்திய கல்விச் சந்தையில் ஏற்றுக்கொள்ள ஏற்றவை. இந்த கூட்டாண்மை நீண்டகால அறிவு பகிர்வு ஒத்துழைப்பின் முதல் படியாக இருக்கும், இது கல்விதுறையில் ஒரு நல்ல தாக்கத்தை உருவாக்குவதற்கும், குழந்தைகளுக்கு சிறந்த கல்வியைக் அளிப்பதற்கும், அவர்களை மிகவும் ஆற்றல்மிக்க மற்றும் தொழில்நுட்ப எதிர்காலத்திற்குத் தயார்ப்படுத்துவதை நோக்கமாக கொண்டு செயல்படவுள்ளது என்று கூறினார்.

மதிப்பீடுகள் மற்றும் ஆய்வுகளின்படி, இந்திய கல்வி தொழில்நுட்ப சந்தை 2022 ஆம் ஆண்டில் 3.2 பில்லியன் அமெரிக்க டாலர்களையும் 2025 ஆம் ஆண்டில் 10.4 பில்லியன் அமெரிக்க டாலர்களையும் எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கல்வியின் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் புதிய கல்வி கொள்கை (என்இபி) மூலம் கடந்த நிதியாண்டில் இந்தியாவில் கல்வி தொழில்நுட்பத்தின் வளர்ச்சி விரைவாக வளர்ச்சி பெற்று வருகிறது. யூனிபார்ம் ஜங்சன் ஏற்கனவே இந்தியா முழுவதும் 500 பள்ளிகளுடன் கூட்டு சேர்ந்துள்ளது, மேலும் 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இந்த எண்ணிக்கையை மூன்று மடங்காக உயர்த்துவதோடு, அடுத்த மூன்று ஆண்டுகளில் 50,000 க்கும் மேற்பட்ட பள்ளிகளை சிறந்த மற்றும் மிகவும் எதிர்கால மாணவர் தீர்வுகளுடன் செயல்படுத்த உதவுகிறது.



**விழுப்புரம்: விழுப்புரம் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகர் பொறுப்பேற்றார்.**

திருப்பூர்: கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் கர்மவீரர் கு.காமராஜரின் 119 வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு கொங்குமண்டல வியாபாரிகள் சங்கம் மூலமாக மகிஷா அரிசி மண்டி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் அன்னதான விழாவினை திருப்பூர் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே என் விஜயகுமார் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் 119 வது பிறந்தநாளை முன்னிட்டு 119 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது இதில் முன்னாள் மண்டல தலைவர் ராதாகிருஷ்ணன் முன்னால் மாமன்ற உறுப்பினர்கள் பிகே முத்து கலைமகள் கோபால்சாமி பகுதி கழக செயலாளர் ஹரிஹரசுதன் .வார்டு செயலாளர்கள் அர்ஜுனன். குமார் .பகுதி கழக அவைத்தலைவர் சிதம்பரம் .வியாபாரிகள் சங்க மாவட்ட தலைவர் மகிஷா ரமேஷ் குமார். மாவட்ட பொது செயலாளர் மாரியப்பன். மாவட்ட பொருளாளர் சீனிவாசன். மாவட்ட துணை தலைவர் விஷ்வக் மணிகண்டன். துணை செயலாளர் ராமர். மகளீரணி தலைவி ஆனந்தி. மகளீரணி செயலாளர் முருகானந்தி. பகுதி செயலாளர்கள் மாரிராஜன். கணேஷ் செல்வகுமார். ரவீந்தர். கண்ணன். சிவசங்கர். ரமேஷ். ஆமோஸ். செந்தில் குமார். மற்றும் உறுப்பினர்கள் கொங்கு நகர் மண்டல வியாபாரிகள் சங்கம் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# மதுரை மாவட்டம் அழகர் கோவிலில் பக்தர்களின்றி நடைபெற்ற ஆடி திருவிழா கொடியேற்றம்

மதுரை, ஜூலை. 17 2021: மதுரை மாவட்டம் அழகர் கோவில் ஸ்ரீ கள்ளழகர் கோவிலில் ஆண்டுதோறும் ஆடிமாதம் நடைபெறும் பிரம்மோற்சவம் வெகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது.

இதில் ஆடி பவுர்ணமி அன்று நடைபெறும் ஆடித் தேரோட்டம் மிகவும் பிரசித்தி பெற்றது.

தென் மாவட்ட மக்களின் குலதெய்வமாக விளங்கும் கூடிய கள்ளழகர் கோவிலில் நடைபெறும் ஆடித் திருவிழா பத்து நாட்கள் நடைபெறும்.இதில் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் நிகழ்ச்சியில் தென் மாவட்டத்தில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு பெருமாளை வழிபட்டு செல்கின்றனர்.

இந்நிலையில் கொரோனா நோய்த்தொற்று காரணமாக கடந்த ஆண்டு ஆடித் திருவிழா ரத்து செய்யப்பட்டு அழகர் கோவில் வளாகத்தில் நடைபெற்றது, அதேபோல் இந்த ஆண்டும் கொரோனா இரண்டாவது அலை காரணமாக ஆடித் தேரோட்டம் ரத்து செய்யப்பட்டு ஆகம விதிகளின்படி கோவில் வளாகத்திலேயே நடத்த திட்டமிடப்பட்டு இருந்தது.

அந்தவகையில் மதுரை மாவட்டம் அழகர் கோவில் கோவில் வளாகத்தில் ஆடி திருவிழா கொடியேற்றம் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக பக்தர்கள் இல்லாமல் கோவில் அர்ச்சகர்கள் பணியாளர்கள் அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

கோவில் பிரகாரத்தில் அமைந்துள்ள கொடிமரத்தில் அம்பி பட்டர் தலைமையில் ஆகம விதிகளின்படி கொடி ஏற்றப்பட்டு மேளதாளங்கள் முழங்க விசேஷ பூஜைகளும்





தீபாராதனைகளும் நடைபெற்றன. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக அதிகாரி அனிதா தனிமையில் கோவில் பணியாளர்கள் அலுவலர்கள் மிக சிறப்பாக செய்திருந்தனர்.

# பெருந்தலைவர் காமராஜரின் 119-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தூத்துக்குடியில் உள்ள காமராஜர் சிலைக்கு முன்னாள் அமைச்சரும் தெற்கு மாவட்ட கழகச் செயலாளருமான எஸ் பி சண்முகநாதன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

தூத்துக்குடி ஜூலை 17 2021: பெருந்தலைவர் காமராஜரின் 119-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு முன்னாள் அமைச்சரும் தெற்கு மாவட்ட கழகச் செயலாளருமான எஸ் பி சண்முகநாதன தூத்துக்குடி வ.உ.சி.மார்க்கெட் அருகில் உள்ள காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திவிட்டு தூத்துக்குடி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியிலும் ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தொகுதியிலும் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் அதிமுக சார்பில் பெருந்தலைவர் காமராஜரின் 119வது பிறந்தநளை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த காமராஜர் சிலை மற்றும் படங்களுக்கு தூத்துக்குடி தெற்கு மாவட்ட அதிமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான எஸ் பி சண்முகநாதன் எம்எல்ஏ மாலை அணிவித்து மரியாதை செய்தார். இந்நிகழ்ச்சியில் அதிமுகவின் பல்வேறு



பொருப்புகளில் உள்ள கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# பெருந்தலைவர் காமராஜரின் 119-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கோவில்பட்டியில் உள்ள காமராஜர் சிலைக்கு சட்டமன்ற உறுப்பினர் கடம்பூர் செ.ராஜூ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

சென்னை, ஜூலை 17, 2021: இங்கிலாந்து தொடருக்கு சென்றுள்ள இந்திய அணி வீரர்கள் 2 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி சௌதம்ப்டானில் ஜூலை 19 முதல் 23ஆம் தேதிவரை நடைபெற்ற உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியிடம் மோதியது. இதில் இந்தியா 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. அதனைத் தொடர்ந்து இந்திய அணி வீரர்கள் நாடு திரும்பவில்லை. இங்கிலாந்துக்கு எதிராக 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக, இங்கிலாந்திலேயே தங்கியிருக்கிறார்கள்.

இத்தொடர் ஆகஸ்ட் 4 முதல் செப்டம்பர் 14 வரை நடைபெறவுள்ளது. போட்டிகள் துவங்குவதற்கு, ஒரு மாத காலம் இடைவெளி இருந்ததால், இந்திய வீரர்களுக்கு மூன்று வாரம் ஓய்வு வழங்கப்பட்டிருந்தது. இந்திய வீரர்களும் மருத்துவப் பாதுகாப்பு வட்டத்தைவிட்டு வெளியேறி, ஊர் சுற்றினர். அப்போது எடுத்த புகைப்படங்களை விராட் கோலி, ரிஷப் பந்த், ரோஹித் ஷர்மா, பயிற்சியாளர் ரவி சாஸ்திரி போன்றவர்கள் இணையத்தில் பகிர்ந்திருந்து, மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தார்கள்.



இந்நிலையில், இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் இருக்கும் இந்திய அணியைச் சேர்ந்த 2 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிசிசிஐ அறிவித்துள்ளது. அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர்களை வெளியிடவில்லை. இருவரும் நலமுடன் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே இங்கிலாந்து சென்று திரும்பிய இலங்கை அணியில் 2 பேருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டதால் இந்தியா-இலங்கையிடையிலான தொடர் ஜூலை 13ம் தேதியிலிருந்து ஜூலை 18-க்குத் தள்ளி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# தூத்துக்குடியில் பெருந்தலைவர் காமராஜரின் 119 வது பிறந்த நாளை முன்னிட்டு பனங்காட்டு படை மக்கள் கழக மாநில வழக்கறிஞர் பிரிவு செயலாளர் சிலுவை நாடார் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்

தூத்துக்குடி, ஜூலை 17 2021: பனங்காட்டு படை மக்கள் கழகம் கட்சி சார்பில் பெருந்தலைவர் காமராஜரின் 119.வது பிறந்த நாளை முன்னிட்டு தூத்துக்குடி தெட்ஷணமாற நாடார் சங்கம் எதிர்புறம் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் திருவுருவ சிலைக்கு மாநில வழக்கறிஞர் பிரிவு செயலாளர் சிலுவை நாடார் மாலை அணிவித்து மரியாதை செய்த பின் பொதுமக்கள் அனைவருக்கும் பொங்கல் மற்றும் லட்டு வழங்கி பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளை வெகு சிறப்பாக நூற்றுக்கும் மேற்பட்ட பனங்காட்டு படை மக்கள் கட்சி நிர்வாகிகள் கொண்டாடினர்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர்கள் தெற்கு



வழக்கறிஞர் திலக் நாடார் வடக்கு அற்புதராஜ்.நாடார். வியாபாரிகள் சங்க செயலாளர் முருகன் .உட்பட ஏராளமானவர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

# மதுரை மாவட்டம் திருமங்கலம் பகுதியில் தொடர்ந்து பொது இடங்களில் பிக்பாக்கெட் திருட்டில் ஈடுபட்டு வந்த பெண் திருடி கையும் களவுமாக பிடிபட்டார்

மதுரை, ஜூலை 17, 2021: மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகாவிற்கு உட்பட்ட கள்ளிக்குடி பகுதியை சேர்ந்த பரமசிவம் என்பவரின் மகள் பால மணி இவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரப்பர்சனல் அசிஸ்டெண்ட்டாக பணிபுரிந்து வருகிறார். தற்போது விடுமுறையில் தனது சொந்த ஊரான கள்ளிக்குடி க்கு வருகை தந்துள்ளார் வருகை தந்த இடத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நேற்று நண்பகல் 12 மணியளவில் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு உடல் நிலை பரிசோதனை செய்து கொள்வதற்காக கள்ளிக்குடியில் இருந்து பேருந்து மூலமாக திருமங்கலத்திற்கு வருகை தந்துள்ளார். இந்நிலையில் திருமங்கலம் பேருந்து நிலையத்தில் கூட்ட நெரிசலை பயன்படுத்தி பால மணி வைத்திருந்த கட்டபையிலிருந்து அவரது மணி பரிசினை பெண்ணொருவர் திருடுவதை கண்ட வேல்பாண்டி என்பவர் கூச்சலிட்டுள்ளார்

இதனை கண்ட அக்கம் பக்கத்தினர் ஒன்று கூடி அந்த பெண்மணியை கையும் களவுமாக பிடித்து திருமங்கலம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இதனைத் தொடர்ந்து காவல்துறையினரின் விசாரணையில் பிடிபட்ட பெண் மதுரை மாவட்டம் வண்டியூர் பகுதியைச் சேர்ந்த முனியம்மாள் என்பதும் இவர் திருமங்கலம் நகர் பகுதியில் பேருந்து நிலையம், ரயில் நிலையம் என பொதுமக்கள் கூட கூடிய கூட்ட நெரிசல் அதிகமுள்ள இடங்களில் தொடர்ந்து பல ஆண்டுகளாக பல்வேறு முறையில் பிக்பாக்கெட் திருட்டில் ஈடுபட்டு வந்தது தெரியவந்தது. இதனை அடுத்து திருமங்கலம் காவல் துறையினர் பிக்பாக்கெட்



திருடி முனியம்மாள் மீது வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்துள்ளனர்.

# மது,கஞ்சா விற்பனை செய்வதில் ஏற்பட்ட மோதல் இளைஞர் கொலை செய்து புதைப்பு 9 மாதங்களுக்கு பின் எலும்புகளாக உடல் மீட்பு

ராமேசுவரம்,ஜூலை.17 2021: ராமேசுவரத்தில் கஞ்சா மற்றும் மது விற்பனையில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக இளைஞர் கொலை செய்து புதைப்பு. 9 மாதங்களுக்கு பின் போலீசார் எலும்புகளாக தோண்டி வியாழக்கிழமை எடுத்தனர். இதில் மூன்று பேர் கைது. தலைமறைவான ஒருவரை தேடி வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் சின்னவன்பிள்ளை தெருவை சேர்ந்தவர் மீனவர் மணிராஜ்., இவரக்கு கணேஷ் ராஜா(17) என்ற மகனும் இரண்டு மகளும் உள்ளனர். பத்தாம் வகுப்பு படித்த கணேஷ் ராஜா ஊரடங்கு காரணமாக பள்ளிகள் திறக்காததால் ஆட்டோ ஓட்டும் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளார். மேலும் கஞ்சா விற்பனை செய்யும் சிலருடன் சேர்ந்து மதுபாட்டில் மற்றும் கஞ்சா விற்பனை செய்து வந்ததாக கூறப்படுகிறது.

கஞ்சா மற்றும் மதுபாட்டில் விற்பனை செய்து வந்த நிலையில் இடம் விட்டு மாற்று இடங்களிலும் மதுபாட்டில் மற்றும் கஞ்சாவை எடுத்து சென்று விற்பனை செய்ததால் சக நன்பர்களுடன் மோதல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த 9 மாதங்களுக்கு முன் இரவு வீட்டை விட்டு சென்ற கணேஸ்ராஜா மீண்டும் வீடு திரும்பவில்லை, குடும்பத்தினர் பல இடங்களில் தேடிப்பார்த்தும் கிடைக்காததால் அவரது தாத்தா சுரேஷ் என்பவர் டவுன் காவல் நிலையதில் புகார் தெரிவித்துள்ளார். இந்த புகாரின் அடிப்படையில் இளைஞர் மாயம் என மட்டும் பதிவு செய்து விட்டு குடும்பத்தினரிடம் வேறு எங்காவது போய் இருப்பார், தேடி பார்க்க காவல்துறையினர் அறிவுறுத்தி உள்ளனர். ஆனால் நன்பர்கள், உறவினர்கள் என பல இடங்களிலம் தேடியும் கணேஸ்ராஜா குறித்த ஒரு தகவலும் கிடைக்கவில்லை, இதனையடுத்து, குடும்பத்தினர் தொடர்ந்து மாவட்ட காவல்துறை, மாவட்ட ஆட்சியர் என புகார் கொடுத்து வந்தனர்.

இந்நிலையில், கடந்த மூன்று நாட்களுக்கு முன் ராமேசுவரத்தில் குடிபோதையில் கொலை செய்து விடுவேன், ஏற்கனவே ஒருவனை கொலை செய்துள்ளோம் என உளறி உள்ளர். இந்த தகவல் அதிதீவிர குற்றப்பரிவு அதிகாரிகளுக்கு கிடைத்தது. இதனைதொடர்ந்து, ஆய்வாளர் நவநீதகிருஷ்ணன் தலைமையில் தனிப்படையினர் குடிபோதையில் உளறிய மூன்று பேரை பிடித்து விசாரணை மேற்கொண்டதில் கணேஷ்ராஜா, மைக்கல் அஜித், முத்துசேரன், அஜித் மற்றும் சதீஷ் ஆகிய 5 பேரும் மது மற்றும் கஞ்சா போதையில் ஒருவருக்கொருவர் சண்டையிட்டதில் கணேஸ்ராஜாவை கொலை செய்து பிளாஸ்டிக் பையில் சுற்றி செம்மமடம் பகுதியில் ரயில்வே தண்டவாளம் அருகே உள்ள மணல் பகுதியில் குழி தோண்டி புதைத்து விட்டதாக தெரிவித்துள்ளனர். இதில், சதீஷ் தவிர்த்து மூன்று பேரை கைது செய்த காவல்துறையினர் புதைத்த இடத்திற்கு அழைத்து சென்று அடையாளம் காட்டினர்.





மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் இ.கார்த்தி தலைமையில் போலீசார், மருத்துவர், மருத்துவ பணியாளர்கள், நகராட்சி பணியாளர்கள் முன்னிலையில் வியாழக்கிழமை தோண்டி கணேஸ்ராஜா எலும்புகளை எடுத்தனர்.



இது குறித்து வழக்குபதிவு செய்து மூன்று பேரும் கைது செய்யப்பட்டனர். மேலும் தலைமறைவாக உள்ள சதீஷ் என்பவரை பிடிக்க தனிப்படையினர் தேடி வருகின்றனர். ராமேசுவரம் புனித தீவாக அனைவரும் நினைக்கும் நிலையில் இங்கு சட்ட விரோத கஞ்சா மற்றும் மது ஆகிய போதைப்பொருட்களை 300 க்கும் விற்பனை செய்து வருவது குறிப்பிடதக்கது.

# உசிலம்பட்டி அருகே லிங்கப்பநாயக்கனூர் கிராமத்தில் சுமார் 100 அடி ஆழமுள்ள கிணற்றில் விழுந்த பசுமாட்டை தீயணைப்புத்துறையினர் பத்திரமாக மீட்டனர்

மதுரை, ஜூலை 17, 2021: மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே லிங்கப்பநாயக்கனூர் கிராமத்தில் வசித்து வருபவர் மொக்கமாயன் மகன் ஒச்சுக்காளை (45). இவருக்கு சொந்தமான தோட்டம் ஊருக்கு அருகாமையில் உள்ளது. இந்நிலையில் ஒச்சுக்காளை வழக்கம் போல் பசுமாட்டை தனது தோட்டத்தில் உள்ள நிலத்தில் மேய்ச்சலுக்காக அவிழ்த்துவிட்டிருந்தார். அப்போது பசுமாடு எதிர்பாராத விதமாக அங்குள்ள சுமார் 100 அடி ஆழமுள்ள (தண்ணீர் உள்ளது) கிணற்றில் தவறி விழுந்து உயிருக்கு போராடி கொண்டிருந்தது. ஒச்சுக்காளை உடனடியாக உசிலம்பட்டி தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தார். தகவலறிந்த தீயணைப்பு நிலைய அதிகாரி தங்கம் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று கிணற்றில் விழுந்த பசுமாட்டை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். கயிறு மூலம் தீயணைப்பு வீரர்கள்



கிணற்றில் இறங்கி கயிறு கட்டி ஒருமணி நேர போராட்டத்திற்கு பிறகு பசுமாடு உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டது. மீடகப்பட்ட பசுமாட்டை தீயணைப்பு வீரர்கள் உரிமையாளர் ஒச்சுக்காளையிடம் ஒப்படைத்தனர்.

# ராமேசுவரத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற 6 மீனவர்கள் படகுடன் மாயம்

ராமேசுவரம்,ஜூலை.17 2021: ராமேசுவரத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற 6 மீனவர்கள் படகுடன் மாயம். தேடும் பணியில் சக மீனவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் மீன்வளத்துறை அதிகாரியிடம் வியாழக்கிழமை அன்று கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகார் தெரிவித்தனர். ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரத்தில் இருந்து புதன்கிழமை 300 க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 1500 க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்வளத்துறை அனுமதி பெற்று கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.

இந்நிலையில், வியாழக்கிழமை காலையில் அனைத்து விசைப்படகுகளும் கரை திரும்பிய நிலையில் செந்தூரான் என்பவரது விசைப்படகு மாலை வரை கரைக்கு திரும்பிவில்லை, மேலும் படகு மற்றும் படகில் சென்ற மீனவர்கள் குறித்த தகவல் தெரியாத நிலையில் அச்சமடைந்துள்ளனர். மேலும் படகில் இருந்தசெந்தூரான்,நம்பு,வேலுச்சாமி,மணி,முத்தரசு,செந்தில் ஆகிய 6 மீனவர்கள் கதி என்ன என தெரியாத நிலையில் சக மீனவர்கள் தேடிச்சென்றுள்ளனர். இது குறித்து கடலோர பாதுகாப்பு குழும காவல்துறை,மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் புகார் தெரிவித்துள்ளனர். ராமேசுவரத்தில் படகுடன் 6 மீனவர்கள் மாயமான சம்பவம் சக மீனவர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கோவில்பட்டியில் பெருந்தலைவர் காமராஜரின் 119 பிறந்தநாளை முன்னிட்டு நகர பாரதிய ஜனதா கட்சி சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்

தூத்துக்குடி ஜூலை 17.2021: தூத்துக்குடி வடக்கு மாவட்டம் கோவில்பட்டி நகர பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக பெருந்தலைவர் காமராஜரின் 119 வது பிறந்த தினத்தை முன்னிட்டு காமராஜர் திருவுருவ சிலைக்கு கோவில்பட்டி பாஜக நகர தலைவர் மா.பாலசுப்பிரமணியன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தபட்டது. நிகழ்ச்சியை அமைப்பு சாரா மாவட்ட துணை தலைவர் நல்லதம்பி மற்றும் இளைஞர் அணி மாவட்ட துணை தலைவர் குருதேவன் சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தனர். இந்நிகழ்ச்சியில் நகர போது செயலாளர் முனியராஜ், பாஜக நிர்வாகி பாலு, முன்னாள் விவசாய அணி மாநில செயலாளர் ராமகிருஷ்ணன், மாவட்ட துணை தலைவி உமா செல்வி, சிறுபான்மை அணி மாவட்ட தலைவர் இன்னாசி, வழக்கறிஞர் பிரிவு மாவட்ட செயலாளர் கோபி, இராணுவ பிரிவு மாவட்ட துணை தலைவர் பெருமாள் சாமி, சிறுபான்மை அணி மாவட்ட பொது செயலாளர் ஜான் பீட்டர், விவசாய அணி மாவட்ட செயலாளர்



பாலமுருகன், நகர துணை தலைவர் செல்வராஜ், நகர செயலாளர்கள் அருணாசலம், சேஷாத்திரி, அருண்குமார், கிளை தலைவர்கள் தனபால், ஜெயராஜ், வெள்ளைச்சாமி, சரவணன் அமைப்பு சாரா நகர தலைவர் தங்க திருப்தி, அமைப்பு சாரா நகர செயலாளர் அமிர்தவேல் பாண்டியன் மற்றும் பாஜக முக்கிய நிர்வாகிகள் கலந்து பலர் கொண்டு பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# பெருந்தலைவர் காமராஜரின் 119-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தூத்துக்குடியில் உள்ள காமராஜர் சிலைக்கு முன்னாள் அமைச்சரும் தெற்கு மாவட்ட கழகச் செயலாளருமான எஸ் பி சண்முகநாதன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

தூத்துக்குடி ஜூலை 17. 2021: பெருந்தலைவர் காமராஜரின் 119-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு முன்னாள் அமைச்சரும் தெற்கு மாவட்ட கழகச் செயலாளருமான எஸ் பி சண்முகநாதன தூத்துக்குடி வ.உ.சி.மார்க்கெட் அருகில் உள்ள காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திவிட்டு தூத்துக்குடி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியிலும் ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தொகுதியிலும் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் அதிமுக சார்பில் பெருந்தலைவர் காமராஜரின் 119வது பிறந்தநளை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த காமராஜர் சிலை மற்றும் படங்களுக்கு தூத்துக்குடி தெற்கு மாவட்ட



அதிமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான எஸ் பி சண்முகநாதன் எம்எல்ஏ மாலை அணிவித்து மரியாதை செய்தார். இந்நிகழ்ச்சியில் அதிமுகவின் பல்வேறு பொருப்புகளில் உள்ள கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# டிடிவி தினகரன் ஆணைக்கேற்ப தூத்துக்குடி மாநகர் மாவட்ட செயலாளர் பிரைட்டர் பெருந்தலைவர் காமராஜர் 119.வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்

தூத்துக்குடி ஜூலை 17. 2021: அ.ம.மு.க. கட்சிப் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் முன்னாள் எம் எல் ஏ ஆணைக்கேற்ப, கழக தேர்தல் பிரிவு செயலாளர் மற்றும் தென் மண்டல பொறுப்பாளர், கடம்பூர எஸ் வி எஸ் பி.மாணிக்க ராஜா ஆலோசனைப்படியும் கல்விக்கண் திறந்த கர்மவீரர் காமராஜரின்119 வது பிறந்த நாளை முன்னிட்டு தூத்துக்குடி மாநகர் மாவட்ட கழக அ.ம.மு.க.கட்சி சார்பில், மாவட்ட கழக செயலாளர் டி வி ஏ வழக்கறிஞர் பிரைட்டர் தலைமையேற்று 15ஆம் தேதி காலை 10 மணி அளவில் தூத்துக்குடி வ உ சி மார்க்கெட் முன்பு அமைந்துள்ள பெருந்தலைவரின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் கே.சண்முக குமாரி கழக வர்த்தக அணி இணைச் செயலாளர் .பி.பாக்கிய செல்வன் மாவட்ட அவைத் தலைவர் .பி வி தங்க



மாரியப்பன் பகுதி செயலாளர்கள் :- முத்தையாபுரம் பகுதி கழக செயலாளர் .என்.கோட்டாளமுத்து அண்ணாநகர் பகுதி கழக செயலாளர் .வி.சின்னசாமி பிரையண்ட் நகர் பகுதி கழக செயலாளர் கே.கிருஷ்ணசாமி சண்முகபுரம் பகுதி கழக செயலாளர் .பி.தர்மராஜ் மாவட்ட மகளிரணி செயலாளர் ஏபிஆர்.அந்தோணி கிரேசி மாவட்ட மாணவரணி செயலாளர் .பி.ஜானியேல் சாலமோன் மாவட்ட மீனவரணி செயலாளர் .ஜிபி.செவனர் கழக பொதுக்குழு உறுப்பினர் .ராமேஸ்வரி மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி இணைச் செயலாளர் மருது பாண்டி மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி துணைச் செயலாளர் .எஸ்.கண்ணன் மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் உசிலை பால்பாண்டி மற்றும், வட்ட கழக செயலாளர்கள்:-

சக்திவேல், செல்வராஜ், ஷேக் முகைதீன், டி.மாரியப்பன், மாரிமுத்து, மோசஸ், போஸ், அம்பலவாணன் மற்றும் கழக தொண்டர்கள் மற்றும் மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவு, கே ஆர் சத்யா உட்பட ஏராளமானவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி. நெசல் கிராமத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ 5,52000 மதிப்பீட்டில் மரக்கன்றுகள் நடும் பணியை மாவட்ட ஆட்சித் தலைவர் மோகன் பார்வையிட்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தார். இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் காஞ்சனா, ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் ராஜா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள்.



சாத்தூர்: பெருந்தலைவர் காமராஜரின் 119 வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு , சாத்தூரில் காமராஜரின் திருவுருவச்சிலைக்கு விருதுநகர் மேற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ரெங்கசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன், நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் டி.எஸ்.அய்யப்பன் மற்றும் நிர்வாகிகள்.




# HELLO Mirror MADRAS

hellomadrasdaily@gmail.com

R.DIS No: 60/2021

Daily Morning Newspaper

The Truth




VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Saturday, July 17, 2021 | Rs.2/- | ISSUE - 3


## Astronomers Find One Group of Appearing and Disappearing Stars


Chennai, July 17, 2021: An international collaboration of astronomers has identified a curious occurrence of nine stars like objects that appeared and vanished in a small region within half an hour in an old photographic plate.

Astronomers collaborating across counties track vanishing and appearing celestial objects by comparing old images of the night sky with new modern one, register unnatural phenomena, and probe deep into such phenomena to record changes in the Universe.

Scientists from Sweden, Spain, USA, Ukraine, and India, including Dr. Alok C. Gupta, Scientist from ARIES, investigated early form of photography that used glass plates to capture images of the night sky from the 12th of April 1950, exposed at Palomar Observatory in California, USA and detected these transient stars which were not to be found in photographs half an hour later and not traced since then. Such a group of objects appearing and disappearing at the same time have been detected for the first time in the history of astronomy.

The astronomers have not found any explanation in well-established astrophysical phenomena like gravitational lensing, fast radio bursts, or any variable star that could be responsible for this cluster of fast changes in the sky.

Dr. Alok C. Gupta, Scientist from Aryabhatta Research Institute of Observational Sciences (ARIES), Nainital, an autonomous institution of the Department of Science and Technology (DST), Government of India, participated in this study which was recently published in Nature's "Scientific Reports". The study led by Dr. Beatriz Villarroel of Nordic Institute of Theoretical Physics, Stockholm, Sweden, and Spain's Instituto de Astrofisica de Canarias, used the 10.4 m Gran Telescopio Canarias (the largest optical telescope around the world) at Canary Islands, Spain, to do deep second epoch



observations. The team hoped to find a counterpart at the position of every object that had appeared and vanished on the plate. The counterparts found are not necessarily physically connected to the weird objects.

The scientists are still exploring the reasons behind the observation of these strange transient stars and are still not sure about what triggered their appearance and disappearance. "The only thing we can say with certainty is that these images contain star-like objects that should not be there. We do not know why they are there," says Dr. Alok C. Gupta.

The astronomers are examining the possibility that the photographic plates were contaminated with radioactive particles causing false stars on the plates. But if the observation is proven to be real, another option is solar reflections from reflective, unnatural objects in orbit around Earth several years before the first human satellite was launched.

The astronomers who belong to the collaboration Vanishing & Appearing Sources during a Century of Observations (VASCO) have still not sorted out the root cause of the "nine simultaneous transients". They are now eager to look for more signatures of solar reflections in these digitized data from the 1950s in a hope to find aliens.

## PM interacts with the CMs of TN and 5 states to discuss Covid situation

Chennai, July 17, 2021: The Prime Minister, Shri Narendra Modi interacted with CMs of Tamil Nadu, Andhra Pradesh, Karnataka, Odisha, Maharashtra and Kerala to discuss Covid related situation. Union Home Minister, Health Minister were also present in the meeting.The Chief Ministers thanked the Prime Minister for lending all possible help and support in tackling Covid. They briefed the Prime Minister about the progress of vaccination and steps that are being taken to contain the spread of the virus in their states. They also provided feedback about the vaccination strategy.

The Chief Ministers talked about the steps taken to boost medical infrastructure and gave suggestions on dealing with any possible rise of cases in future. They also discussed post-Covid issues being faced by patients and steps being taken to provideassistance in such cases. They gave assurance that they are doing their best to control the surge of infection.

Union Home Minister mentioned that these six states account for more than eighty percent of the total cases during the month of July , while some of these states have very high test positivity rate as well. Union Health Secretary discussed the Covid cases in the country, and talked about the need to reinforce Covid appropriate behaviour and containment measures in the districts with high case load. He also suggested that opening up of these districts should be done in a graded and calibrated manner.

In his closing remarks the Prime Minister lauded the state governments for their mutual cooperation and learning in their fight against the pandemic. The Prime Minister said that all of us are at a point where apprehensions of the third wave are continuously expressed. Despite experts giving positive signals due to the downward trends increasing number of cases in few states is still worrisome. The Prime Minister pointed out that during the last week 80 per cent cases as well as 84 per cent unfortunate deaths came from the states present in the meeting. Initially experts believed that states where the second wave originated will see the normalization first. However, increasing numbers in Kerala and Maharashtra are cause of grave worry, said the Prime Minister.

The Prime Minister cautioned that similar trends were seen in January-February before the second wave. That's why, the Prime Minister insisted, that in the states where cases are rising, we have to take proactive measures to prevent the possibility of the third wave.

The Prime Minister underlined the expert's view that if the cases keep on rising for long time, chances of



mutation of the Corona virus will also increase and dangers of new variants will also rise. Therefore, said the Prime Minister, we need to continue with the strategy of Test, Track, Treat and Teeka (vaccination) while putting special focus on Micro-containment zones. Districts with large numbers should be focussed on. Shri Modi stressed increased testing in entire states. Terming vaccine as a strategic tool for high infection areas, the Prime Minister stressed the effective use of vaccination. The Prime Minister praised the states who are using this time to improve their RT-PCR testing capacity.

The Prime Minister talked of the financial help that is being provided for enhancing medial infrastructure like ICU beds and testing capacity. Referring to the recently approved Rs 23000 emergency Covid response package, the Prime Minister asked the states to use the funds to strengthen medical infrastructure.

The Prime Minister exhorted the states to fill the infrastructural gaps, specially in the rural areas. He also asked to strengthen IT systems, control rooms and call centres so that citizens get access to resources and data in a transparent manner and patients are spared the hassle. Shri Modi said that out of 332 PSA plants allocated to the states present in the meeting, 53 plants have been commissioned. He asked the Chief Ministers toexpedite the completion of the plants. The Prime Minister made special mention of the need to protect children from being infected and make all possible arrangement in this regard.

The Prime Minister noted with concern the rise of number of cases in Europe, America and Bangladesh, Indonesia Thailand and many other countries. This should alert us and the world, said the Prime Minister.

The Prime Minister reiterated that Corona is not over and expressed deep concern over the pictures that are coming post lockdown. He emphasized need to follow protocol and avoid crowding as many states in the meeting have metropolitan cities with dense population. He also called upon political parties, social organizations, and NGOs to spread awareness among people.

## Power Minister releases 9th Integrated Ratings of State Power Distribution utilities and Rankings

Chennai, July 17, 2021: Union Minister of Power, New and Renewable Energy, Shri R.K. Singh released 9th Integrated Ratings for State Power Distribution Utilities today here. The Minister appreciated that the Ninth Annual Integrated Rating exercise covering 41 State Power Distribution Utilities for the rating period FY 2019-20 has been completed with the enthusiastic participation of all the utilities.

He congratulated all stakeholders, especially the state distribution utilities for their active role and support in successfully completing the Ninth Annual Integrated rating exercise despite the ongoing pandemic. He added that the Indian Power sector will benefit from a fair and accurate assessment of the true position of the distribution sector which in turn will help in assessing and improving its performance. This will also assist State Governments, lending institutions and other stakeholders to take important decisions.

The Minister also congratulated PFC on completing 35 glorious years of formation. He said that over the period, PFC has become a leading NBFC and a key player in financing of the Indian Power sector. He added that PFC will be an instrumental strategic partner in government reform schemes for power sector such as Rs. 3 trillion 'Reforms-based and Results-linked, Revamped Distribution Sector Scheme', Atmanirbhar DISCOM package, etc. He appreciated PFC for being on a path of



rapid development & growth. He wished that PFC's legacy continues and inspires all the stakeholders in the power sector.

Shri Singh further spoke about achieving the target of One Nation-One Grid- One Frequency with the addition of Transmission Lines of 1.52 lakh cKm. Going beyond infrastructure creation and bridging supply side gaps, the Government has also focused on consumer empowerment. He further added that the recently notified "Electricity (Rights of Consumers) Rules, 2020" is a step in this direction. This major initiative will put consumer at the center-stage, and is an important step towards improving Ease of Living and Ease of Doing Business across the country.






## BSA Ladybird completes landmark 25 years of success empowering millions of young girls

Chennai, July 17, 2021: BSA's Ladybird, India's first bicycle brand for girls, completes 25 years of success in the market. Under the BSA banner of Tube Investments of India Limited, Ladybird cycles continue to be preferred for features such as elegance and feminine charm. These cycles have been and continue to be, popular amongst the Indian Tween girls.

For over two and a half decade, the brand has empowered girls to be independent, responsible and given a sense of ownership during a phase where tween girls are figuring out their individuality, identity and standing in the society.

On the product front, BSA has offered a wide range of customer-centric bicycles, which is known for being stylish, yet fun, practical, reliable and user friendly. With Anti Slip Chain, cushioned saddles, soft hand-grips, step-through frames, easy-glide hubs, front basket and many more features, the brand takes pride in offering a comfortable ride for its young, unstoppable consumers.

Announcing the silver jubilee milestone, KK Paul, President, TI Cycles of India, said, "Fun, freedom, energy, style and comfort are some of the values that define the BSA Ladybird. Over the last 25 years, BSA Ladybird has not just partnered a girl's self-determined quest for independence, but also been an extension of her personality and style statement. Over the last decade alone, 3.5 million young girls and women have experienced the joy of riding a BSA Ladybird Cycle. To celebrate this feeling, we are releasing a film, in which we have attempted to capture how early experiences and childhood, evolve us. In order for women to pursue their dreams, it is imperative for us to acknowledge the importance of freedom for the girls, at the right time, to emerge stronger than ever. Today, we thank them for trusting and including us in their journey of growth."

The celebratory film, titled, 'Fun Turns 25', which captures the essence of BSA Ladybird, can be viewed here https://www.youtube.com/watch?v=kcfCxmKFD8E

Behind the success of BSA Ladybird is a hardworking and dedicated team with a vision of providing the highest quality of products and service. Over the years, this team has dedicated themselves to product innovation, manufacturing efficiencies and improving customer satisfaction. BSA cycles are manufactured at the Ambattur and Rajpura plant and sold through 2500 dealerships PAN India including its very own Track and Trail retail channel present across 190 dealerships across the country. Girls aged 8-15 are its primary customers and it is most often used to go to school, tuition classes, hanging out with their friends



or just riding out to explore and craft their own experiences.

BSA believes in promoting cycling for all. Besides young girls, it has a range of cycles catering to kids as well. Making cycling fun will help more kids to learn this skill which helps in spurring a motor development and provides other benefits like increased confidence, better sense of independence, the desire to explore new places and good social skills. It also has the added benefit of keeping our children active and fit.

## COP distributed TN CM Constabulary Medals to Police Personnel










Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction